# 9

# ஆன்மீகப் போராட்டம்



# SPIRITUAL WARFARE

# 9

## எப்படிப் போராடக்கூடாது?

HOW NOT TO BATTLE

**1**

பிசாசைக் குறைவாய் மதிப்பிடக்கூடாது.

**2**

பிசாசை அளவுக்கு மிஞ்சி மதிப்பிடக்கூடாது.

**3**

சொந்த வாழ்வைக் கவனியாது விடக்கூடாது.

**4**

உள்ளிருக்கும் எதிரியை அலட்சியம் செய்யக்கூடாது.

**5**

சாத்தானைக் கட்ட முயலக்கூடாது.

**6**

அப்போஸ்தலர் பாணியல்லாதவற்றைச் செய்யக்கூடாது.

**7**

வேதத்திற்குக் கூடுதலானவற்றில் ஆர்வம் கூடாது.

**8**

பிசாசு துரத்துவதில் அதிகம் பரவசமடையக்கூடாது.

**9**

தனித்தே போராடக்கூடாது.

**10**

உங்கள்மீதே சார்ந்திருக்கக்கூடாது.

9

# எப்படிப் போரடக்கூடாது?

## அறிமுகவுரை

- கிறிஸ்தவ வாழ்வு துவக்க முதல் முடிவு வரை "போராட்டமே" —
  - ☐ கொலோ 1:13 ... *இருளின் அதிகாரத்தினின்று ...*
    *திருக்குமாரனது ஆட்சிக்குள் ...*
  - ☐ பவுல் தனது வாழ்வின் கடைசியில் —
    2 தீமோ 4:7 ... *போராடினேன் ... முடித்தேன் ...*
  - ☐ ஏழு சபைகளுக்கும் கிறிஸ்துவின் இறுதி வார்த்தை —
    வெளி 2 & 3 ... *வென்றிடுபவன் எவனோ ...*
    (2:7,11,17,26; 3:5,12,21)
- காலத்தின் முடிவுக்குள் நாம் வர வர,
  போராட்டம் இன்னும் தீவிரமடைகிறது —

  வெளி 12:12ஆ ... *பிசாசு ... கொஞ்சக் காலம் ... மிகுந்த கோபம்*

  பிசாசின் பிரதானப் பணி: *"மோசம் போக்குதல்"* (வச 9)

  இப்படித்தான் அவன் ஆதி முதல் அறிமுகம் —
  (ஆதி 3:1) *தந்திரமுள்ள ...*

  இந்த ஆன்மீகப் போராட்டத்தில்,
  அவன் இறைமக்களை வேதத்தைத் தழுவாத,
  பயனற்ற வழிமுறைகளைக் கையாளத் தூண்டிவிடுகிறான்—
  அவன் வெல்லுவதற்காக!
- *"சத்திய ஆவிக்கும்," "வஞ்சக ஆவிக்கும்"* முரண்பாடு
  இருந்துகொண்டேயிருக்கும் — 1 யோ 4:6

  பரிசுத்த ஆவியானவரே *"சத்திய ஆவியானவர்"* (யோ 16:13)
  பைபிள் முழுவதும் அவரது அகத்தூண்டுதலாலேயே (2 பேது 1:20,21).
  வேதத்திற்குக் கூடுதலான எதுவும் *"வஞ்சக ஆவியிடமிருந்தே"*
  (1 கொரி 4:6)

*''சத்திய ஆவிக்கு''* நாம் கீழ்ப்படியும்போதுதான் *''வஞ்சக ஆவியின்''* தாக்குதல்களை மேற்கொள்ளமுடியும் —

ரோ 16:17-20 ... *வஞ்சிக்கிற ... கீழ்ப்படிதல் ... சாத்தானை ... நசுக்கி ...*

தேவனது அனைத்துப் படைக்கலன்களில் முதல் ஆயுதமே

*''சத்தியமாகிய அரைக்கச்சைதான்''* (எபே 6:14)

இப்பட்டியலில் கடைசியும் தேவ வசனமாகிய

*''ஆவியின் பட்டயம்''*தான் —

அதாவது, எல்லாப் படைக்கலன்களும் *''சத்திய வார்த்தைக்குள்''* அடங்கியுள்ளன.

கூட்டவோ, குறைக்கவோ கூடாது!

இடப்புறமோ, வலப்புறமோ சாயக்கூடாது!

■ பிசாசிடம் இயேசு வாக்குவாதம் செய்யவில்லை;

*''எழுதியிருக்கிறதே''* என்றார் அவ்வளவுதான் — மத் 4:1-10

பிசாசு தனது தந்திரங்களை ''மாற்றிக்கொண்டே'' இருப்பான்;

''மாறாத'' திருவசனத்தை நாம் விட்டுவிட்டால்

அவனை மேற்கொள்ள முடியாது.

திருமறையின் எல்லைகளை நாம் மீறும்போது,

பிசாசுக்கு ஒரே கொண்டாட்டம்;

ஏனெனில், அவன் எளிதாய் நம்மைத் தாக்கிவிடலாம் —

பிர 10:8ஆ ... *அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும்.*

## எப்படிப் போராடக்கூடாது?

### 1. பிசாசைக் குறைவாய் மதிப்பிடக்கூடாது.

Do not underestimate the devil.

■ எந்த யுத்தத்திலும் கற்கவேண்டிய முதல் பாடம் —

"உனது எதிரியை அறிந்துகொள்!" (Know your enemy!)

■ பிசாசு என்பவன் யார்?

| | |
|---|---|
| இயேசு கூறியபடி | ☐ *இந்த உலகின்* ***அதிபதி*** (யோ 14:30) |
| பவுல் கூறியபடி | ☐ *ஆகாயத்து அதிகாரப்* ***பிரபு*** (எபே 2:2) |
| | ☐ *இப்பிரபஞ்சத்தின்* ***தேவன்*** (2 கொரி 4;4) |

தனது வாழ்வின் முடிவில் யோவான் உறுதிப்படுத்தியது —

1 யோ 5:19 ... (அ) *நாம் தேவனால் ... என்று அறிந்திருக்கிறோம்.*

மேலும் ... (ஆ) *உலக முழுவதும் ... பொல்லாங்கனுக்குள் ...*

முதல் கூற்றை (அ) எவ்வளவு தெரிந்திருக்கிறோமோ,
அதே அளவு இரண்டாவதையும் (ஆ) தெரிந்திருக்கவேண்டும்.

■ பிசாசின் குணங்கள் யாவை?

☐ அறிவும், அழகும்

எசேக் 28:12,13 — இப்பகுதி பெருமைநிறை தீரு மன்னனின் வீழ்ச்சியைக் குறித்தது.
எசேக்கியேல் இதைச் சாத்தானின் வீழ்ச்சியோடு ஒப்பிடுகிறான்.

(அ) *"பூரண"* அழகுள்ளவன் — உலக அழகிபோல "ஒப்பீட்டு" அழகல்ல

சாத்தான் உலக அழகன் — "நிறைவான" அழகு!

(ஆ) *ஞானத்தால் "நிறைந்தவன்"* — எனவேதான், மிகுந்த தந்திரம் ... (ஆதி 3:1)

அவன் மகா தந்திரவாதி —
2 கொரி 2:11ஆ ... *அவனது தந்திரங்கள் தெரியாதவையல்ல*

அவன் சூழ்ச்சியில் வித்தகன் —

2 கொரி 11:3 … *சர்ப்பம் … ஏவாளை வஞ்சித்ததுபோல …*

அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவு கெட்டிக்காரன் —

2 கொரி 11:14 … *ஒளியின் தூதனின் வேடம்*

□ பலம்

மாற் 5:1-4 … *சங்கிலிகள், விலங்குகளை முறித்து …*

அப் 19:14-16 … 7 வாலிபரைத் தோற்கடித்து …

இன்று விளையாட்டு வீரர் பலத்துக்காக ஊக்க மருந்து எடுக்கின்றனர். தேவ ஆவி தன்மீது வந்தபோது சிம்சோன் அசாதாரண பலம் பெற்றான்.

சாத்தானும் மனிதர் மூலம் அசாதாரணமாய்ச் செயல்பட முடியும்.

□ அற்புத வல்லமை

2 தெச 2:9 … *வல்லமை … அடையாளங்கள் … அற்புதங்கள்*

— (யாத் 7 & 8) எகிப்தின் மந்திரவாதிகள் மந்திர வித்தையினால் … ஆரோனின் கோல் அவர்களது கோல்களை விழுங்கிவிட்டாலும், பிசாசின் வல்லமையினாலும் அற்புதங்கள் நடக்க முடியும் என்பது நிரூபிக்கப்படுகிறது.

— ஆரோன் தனது கோலால் தண்ணீரை அடித்தபோது,
அது இரத்தமாய் மாறிப்போயிற்று.
எகிப்திய மந்திரவாதிகளாலும் அப்படிச் செய்ய முடிந்தது.

— ஆரோன் தனது கையை எகிப்தின் தண்ணீர்கள்மீது நீட்டியபோது
தவளைகள் வந்து நாட்டை நிரப்பின.
இதையும் மந்திரவாதிகளால் செய்ய முடிந்தது.

இதற்கு மேல் அவர்களால் அது போன்ற அற்புதங்களைச் செய்ய இயலவில்லை; ஆனாலும் மேற்கூறிய அற்புதங்கள் சாதாரணமானவையோ?

☐ பிளவுபடாத ஆட்சி

இந்த சாட்சியை இயேசுவே கொடுத்தார்.
மத் 12:26 ... *தனக்குத் தானே பிரிந்திருக்கிற ... நிலைநிற்கும் ...*

ஓர் இராஜ்யத்தையே உடையாமல் காத்துக்கொள்ளும்
சாத்தானின் வல்லமையை யோசித்துப்பாருங்கள்!

மட்டுமல்ல, அவனது ஆட்சி சீரான அமைப்பாயிருக்கிறது —
எபே 6:12 ... *துரைத்தனங்கள் ... அதிகாரங்கள் ... அந்தகார லோகாதிபதிகள் ... சேனைகள் ...*

எப்படி இவர்களால் இவ்விதம் இணைந்து நிற்க முடிகிறது?
அவர்களது ''நோக்கம்'' ஒன்றே!

2 தெச 2:4 ... *தேவனை எதிர்க்கவும், அவரைத் தள்ளவும்!*

சாத்தானைக் குறைவாய் மதிப்பிடக்கூடாத மற்றொரு காரியம் —

☐ அவனது அனுபவம்

நமது முதற் பெற்றோர் துவங்கி,
மனிதனைச் சோதிப்பதில் 6000 ஆண்டுக்குமேல் அனுபவம்.

யாரையெல்லாம் அவன் சோதித்த அனுபவம் என்று பாருங்கள்—

- யோபு போன்ற கோத்திரப் பிதாக்கள்
- தாவீது போன்ற அரசர்
- யோனா போன்ற தீர்க்கர்
- சீமோன் பேதுரு போன்ற அப்போஸ்தலர்
- அனனியா, சப்பீராள் போன்ற தம்பதியர்

அவன் இயேசுவை *''எல்லா விதத்திலும்''* சோதித்தான்! (எபி 4:15)
இயேசுவைச் சோதித்த அவனது அனுபவத்திலிருந்து
''எப்படிச் சோதிக்கக்கூடாது'' என்று கற்றிருப்பான்!

— வீழ்ச்சிக்குமுன், சாத்தான் வல்லமையான தேவ தூதரில் ஒருவனாயிருந்தான்; எனவே தேவனும், தூதரும் எப்படிச் செயல்படுவார் என்பதை அவன் நன்கறிவான்!

— அவனது இந்த நீடித்த அனுபவங்களைக் குறிப்பிட்டுத்தான், *''பழைய பாம்பு''* என்று அவன் அழைக்கப்படுகிறான் (வெளி 12:9)

அவனது காலா கால அனுபவத்தைக் குறிப்பிட்டுத்தான்,

அவன் *''ஏவாளை வஞ்சித்த சர்ப்பம்''* என்றழைக்கப்படுகிறான் (2 கொரி 11:3)

☐ அவனது தணியா விறுவிறுப்பு —

1 பேது 5:8 ... *கர்ஜிக்கிற சிங்கம்போல் ... சுற்றித் திரிகிறான்*

யோபு 2:2 ... *பூமியெங்கும் உலாவி ... சுற்றித் திரிந்து*

மத் 12:43 ... *வறண்ட இடங்களில் அலைந்து ...*

லூக் 4:13 ... *''சாதகமான காலம்''* வரும்வரை *சில காலம்தான் இயேசுவை விட்டு விலகினான்.*

## 2. பிசாசை அளவுக்கு மிஞ்சி மதிப்பிடக்கூடாது.
Do not overestimate the devil.

- முந்திய அத்தியாயத்தில் பிசாசைக் ''குறைவாய் மதிப்பிடக்கூடாது'' என்று கற்றுக்கொண்டோம்;
இப்பொழுது அடுத்த பக்கத்தைப் பார்ப்போம்.

- சாத்தான் ''படைக்கப்பட்டவன்''தான் —
எசேக் 28:15 ... *நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி ...*
ஆதி 3:1 ... *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சர்ப்பம் ...*

தூதர்களையும் வான் சேனைகளையும் தேவனே உண்டாக்கினார் —
சங் 148:2-5 ... *அவர் கட்டளையிட அவைகள் படைக்கப்பட்டன.*

தேவனுக்கு விரோதமாய் சாத்தான் எழும்பியபோது, ஒரு கூட்ட தூதர்கள் அவனோடு சேர்ந்துகொண்டனர்; அவர்கள்தான் அசுத்த ஆவிகள்.

சாத்தான் ''படைக்கப்பட்டவன்'' என்பதால்,
''படைத்தவராகிய'' தேவனுக்குக் குறைந்தவன்தான்!

அவன் வல்லவன்தான், ஆனால் சர்வ வல்லவன் கிடையாது!
தேவனாகிய கடவுளைப் போலல்லாது, அவனுக்கு வரம்புகளுண்டு.

எனவேதான்,
*''உங்களிலிருக்கிறவர் உலகத்திலிருக்கிறவனிலும் பெரியவர்''*
(1 யோ 4:4)
சூழமைவு: *''கள்ளத் தீர்க்கர்''* (வச 1)
*''அந்திக்கிறிஸ்துவின் ஆவி''* (வச 3)

*''சிறு பிள்ளைகளுக்கு''* எழுதப்பட்டது!
வயதைக் குறித்தல்ல,
பயமுறுத்தப்படும்போது சோர்ந்துபோகாதபடி,
நம்மை உற்சாகப்படுத்தவே இப்படி!

கிறிஸ்துவே *"அதிக பலவான்"* —

லூக் 11:20-22

- ■ உண்மையில் சாத்தான் இறங்கிக்கொண்டுதானிருக்கிறான் —
  - ☐ விண்ணகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான்
    எசேக் 28:16,17... *பாவஞ்செய்தாய்... உன்னைத் தரையிலே தள்ளி ...*
  - ☐ கிறிஸ்துவால் அவரது வாழ்வில் வீழ்த்தப்பட்டான்
    யோ 14:30 ... *இவ்வுலகின் அதிபதி ... என்னிடத்தில் ஒன்றுமில்லை*
  - ☐ சிலுவையில் கிறிஸ்துவினால் உரிந்துகொள்ளப்பட்டான்
    கொலோ 2:15 ... *துரைத்தனங்களை உரிந்துகொண்டு ...*
  - ☐ 1000 ஆண்டு சங்கிலிகளால் கட்டிவைக்கப்படுவான்
    வெளி 20:1-3 ... *ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து ...*
  - ☐ நித்திய அக்கினிக்காய் நியமிக்கப்பட்டவன்
    மத் 25:41 ... *பிசாசுக்காக ... நித்திய அக்கினி ...*

அவன் **தோற்கடிக்கப்பட்ட** எதிரி!

- ■ நமது கண்கள் திறக்கப்படவேண்டியதே காரியம் —

  (உ-ம்) எலிசா தனது வேலைக்காரனுக்காக ஜெபித்தான் —
  2 இரா 6:15-17 ... *"ரதங்கள்"* vs. *"அக்கினிமய ரதங்கள்"*

  (உ-ம்) பவுல் பரிசுத்தவான்களுக்காக ஜெபித்தான் —
  எபே 1:18-21 ... *பிரகாசமுள்ள மனக்கண்கள் ...*

- ■ கர்த்தரையே நம் கண்களுக்குமுன் நிறுத்தி நோக்கவேண்டும்;
  சாத்தானைப் பற்றியே யோசித்துக்கொண்டிருக்கக்கூடாது —

  அப் 2:25-27 ... அதுவே *பாதாளத்தை* மேற்கொள்ளும் ஜெயம்

  - ☐ கானானுக்கு அனுப்பப்பட்ட 12 உளவாளிகள்.
    10 உளவாளிகள் ... *இராட்சதர் ... வெட்டுக்கிளிகள்* (எண் 13:33)
    2 உளவாளிகள் ... *"அவர்கள் நமக்கு இரை!"* (14:9)
  - ☐ இஸ்ரவேலர் எரிகோவைப் பார்த்ததும் மிரண்டனர்,
    எரிகோ வாசிகளோ இஸ்ரவேலருக்குப் பயந்தனர்!

ராகாபின் அறிக்கை (யோசு 2:9) ... *உங்களைப்பற்றித் திகில் ...*

ஆம், பிசாசு நமக்குப் பயந்தே இருக்கிறான்!
மார்ட்டின் லூத்தர்: ''சாத்தானை ஒரே **வார்த்தையால்** வீழ்த்தலாம்;
அந்த **வார்த்தைதான்** கிறிஸ்து!

- சாத்தான் நம்மைத் தாக்கினாலும், தேவன் அனுமதித்த அளவுக்குத்தான் அவன் செயல்பட முடியும் —

  யோபு 1:12; 2:6

- மார்ட்டின் லூத்தர் (1483-1546) எழுதிய கீர்த்தனை:

*பிசாசுகள் நிறைந்த இவ்வுலகம்,*
*பதிவிருக்குமாம் நம்மை விழுங்க,*
*இதயம் கலங்கித் தவிக்க வேண்டா;*
*அவை நம்மை மேற்கொள்ளா.*
*சதிமோச நாசப் பிரபு,*
*சீறுவான் எப்போதும்;*
*சிறிதேனும் நமக்கவனால் சேதமில்லை;*
*ஏன்? அவன் அழிவு எழுத்தில் உள்ளது;*
*ஒரே வார்த்தை அவனைச் சாய்க்கும்!*

## 3. சொந்த வாழ்வைக் கவனியாது விடக்கூடாது.

Do not neglect your personal life.

- நமது போராட்டம் தேவனது பிரதான சத்துருவுக்கு எதிரானது; எனவே நமது வாழ்வில் தேவனுக்குப் பிரியமற்ற, சாத்தானுக்குப் பிரியமான, எதுவுமே இருக்கக்கூடாது!

தேவனது படைக்கலன்களுக்கு இரு பெயர்கள் உள்ளன —

(அ) ***ஒளியின்*** *ஆயுதங்கள்*

ரோ 13:12-14 ... *களியாட்டு ... வெறி ... இல்லாது ...*
(ஒப்பிடுங்கள்) எபே 5:11 ... *இருட்டுச் செயல்கள்*
பிசாசுகள் *அந்தகார லோகாதிபதிகள்* (எபே 6:12)

(ஆ) ***நீதியின்*** *ஆயுதங்கள்*

2 கொரி 6:7 ... *"வலதிடது பக்கத்து ஆயுதங்கள் ..."*
அதாவது முழுக்க முழுக்க நீதியாய் வாழுதல்.
அநீதி இறையரசிற்கு எதிரானது (1 கொரி 6:9)
*நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது?* (2 கொரி 6:14)

நாம் *அரைக்கச்சை, மார்க்கவசம், கேடயம், பட்டயம், காலணி* என்பவை குறித்தெல்லாம் பேசலாம்; ஆனால், நாம் *ஒளியிலும், நீதியிலும்* நடக்குமளவுக்குத்தான் இவையெல்லாம் பயன் தரும்.

துர்ப்பாக்கியமாக, "ஆன்மீகப் போராட்டம்" பற்றிய கருத்தரங்குகளில் பரிசுத்தத்தைவிட "வல்லமையைக்" குறித்தே அதிகம் பேசப்படுகிறது.
(Purity vs. Power) — இது பிசாசுக்குச் சாதகமாகிவிடுகிறது.

(அ) "ஒளியில்" நடக்கும் வாழ்வு என்றால் என்ன?
= தேவனோடு ஒளிவுமறைவின்றி நடத்தல் (1 யோ 1:7-9)

நாம் நமது பாவங்களை மறைத்தால்,
சாத்தான் தேவனுக்குமுன் நம்மைக் குற்றப்படுத்த முடியும்;
நாம் தேவனுக்குமுன் அவைகளைத் திறந்துவைத்தாலோ
தேவன் அவற்றைக் கிறிஸ்துவின் இரத்தத்தால் மூடுகிறார்.
அப்பொழுது அவன் நம்மைக் குற்றப்படுத்த முடியாது!

(ஆ) ''நீதியில்'' நடக்கும் வாழ்வு என்றால் என்ன?

பாவமில்லாமை அல்ல, தேவனுக்கு அடிபணிந்திருப்பது.

ரோ 10:3 ... *தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள் ...*

தேவபக்திக்கேதுவான முயற்சிகளைச் சாத்தான் எதிர்க்கிறான் (சக 3:1-5)

■ ''நீதியின்'' வாழ்வுதான் வெற்றிக்கு நடத்துவதைப் பாருங்கள் —

☐ யாக் 4:7 ... *தேவனுக்குக் கீழ்ப்படி ... பிசாசுக்கு எதிர்த்து நில் ...*

☐ ரோ 16:19,20 ... *உங்கள் கீழ்ப்படிதல் ... சாத்தானை நசுக்கி ...*

☐ சங் 81:13,14 ... *என் மக்கள் ... எனக்குச் செவிகொடுத்து ... எதிராளிகளைத் தாழ்த்தி*

☐ மத் 8:8,9 ... *நூற்றுக்கதிபதி ... அதிகாரம் ... வார்த்தை ...*

ஆனால், அப் 19:13,16 ... மார்க்கம் உண்டு, நீதியான வாழ்வு இல்லை

தேவனுக்குக் கீழ்ப்படிகிறவனுக்குப்
பிசாசு கீழ்ப்படியாதிருக்க முடியாது!
எனவேதான் இயேசுவுக்குப் பிசாசு கீழ்ப்படியாதிருக்க முடியவில்லை!

இயேசுவின் சாட்சி:

யோ 14:30 ... *அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை ...*

■ நாம் கீழ்க்கண்டவற்றிற்கு இடங்கொடுத்தால்
சாத்தானுக்குத்தான் இடங்கொடுக்கிறோம் —

☐ கோபம்

எபே 4:26,27 ... *கோபம் ... பிசாசுக்கு இடங்கொடாமல் ...*

☐ மன்னியாமை

2 கொரி 2:10,11 ... *சாத்தானாலே மோசம்போகாதபடி ... மன்னிக்கிறேன் ...*

☐ கவலைகள்

1 பேது 5:7-9 ... *கவலைகள் ... எதிராளியாகிய பிசாசு ...*

- சாத்தான் ஒரு திருடன் (யோ 10:10)

அவன் நமது பரிசுத்தத்தைத் *"திருடவும்"*
நமது தேவ பக்தியைக் *"கொல்லவும்"*
நமது நீதியை *"அழிக்கவுமே"* வருகிறான்.

அவனது சோதனைகளை மேற்கொள்ள விழிப்பாயிருங்கள்.

- H.R. Palmer (1834-1907) எழுதிய பாமாலை:

*Yield not to temptation, for yielding is sin*

*தீவினை செய்யாதே மா சோதனையில்;*
*பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்;*
*வீண் ஆசையை முற்றும் கீழடக்குவாய்;*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்!*

*வீண் வார்த்தை பேசாமல் வீண் தோழரையும்*
*சேராமலே நீங்கி, நல் வழியிலும்*
*நின்றூக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்;*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்!*

(பார்க்க: பக்கங்கள் 267-269, 540-542, 778-780)

## 4. உள்ளிருக்கும் எதிரியை அலட்சியம் செய்யக்கூடாது.

Do not ignore the enemy within.

- உள்ளிருக்கும் எதிரிகளை நாம் மேற்கொள்ளும்வரை
வெளி எதிரியை வெல்ல முடியாது —

  நீதி 25:28 ... *ஆவியை அடக்காத மனிதன் மதிலிடிந்த நகர்*

  இதுவே பவுலின் சொந்த சாட்சி:

  1 கொரி 9:26ஆ, 27 ... *உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் ...*

- உள்ளே நடக்கும் இரு போராட்டங்கள் —

  **(அ) மாம்சத்தில் போராட்டம்**

  ரோ 7:22-24 ... *மனதின் பிரமாணம்* x *உறுப்புகளின் பிரமாணம்*
  ஒரு சிறைவாசம்!
  விடுதலையாயிருக்கிறவனே எதிரியோடு போராட முடியும்;
  ஒரு கைதி அப்படிச் செய்யமுடியாது!

  இதே சத்தியத்தைப் பவுல் வேறொரு இடத்திலும் குறிப்பிடுகிறான் —
  கலா 5:17 ... *"மாம்சம்"* vs. *"ஆவி"*

  மாம்சத்தின்மீது வெற்றி என்றால் என்னவென்பதை
  விளங்கிக்கொள்ளாததால், பல விசுவாசிகள் வாழ்நாள் முழுவதையும்
  தீர்ப்புணர்விலேயே (condemnation) கழிக்கின்றனர் —

  அது ஒழித்துவிடுதல் அல்ல, விடுதலையாக்கப்படுதல்!
  (Not eradication, but emancipation!)

  விடுதலையாக்கப்படுதல்: ரோ 7:24 / 8:2 ...
  *"மரண சரீரத்தினின்று ... விடுதலை ..."*
  ஒழித்துவிடுதல் அல்ல: 1 யோ 1:8,9 ...
  *"நமக்குப் பாவமில்லை என்போமானால் ..."*
  எப்படி?
  (அ) *உங்கள் பழைய மனிதன் செத்துவிட்டதாக*
  *எண்ணிக்கொள்ளுங்கள்* (ரோ 6:11)
  அதாவது, முந்தைய இச்சைகளுக்கு,
  மறுப்பு தெரிவித்துக்கொண்டிருங்கள் (வச 12)

(ஆ) *உங்கள் அவயவங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்* (வச 13)

எப்படி?

அக்கிரமங்களை நடப்பிக்க முன்னர் ஒப்புக்கொடுத்ததுபோல (வச 19)

கைகள் ... கால்கள் ... உதடுகள் ... காதுகள் ... ஒவ்வொன்றாய் ...

(இ) *''ஊனியல்புக்கு''* எதிராக உங்கள் *''ஆவியைப்''* பலப்படுத்துங்கள்.

விழிப்பான ஜெபத்தின் மூலம்.

மத் 26:41 ... *உற்சாக ஆவி ... வலுவற்ற உடல் ...*

(ஈ) *''மாம்சத்தின் கிரியைகளை''* மேற்கொள்ள *''ஆவியின் கனியை''* விளைவியுங்கள்.

கலா 5:19-21 vs. 22,23

உத்திரவாதம்:

வச 16 ... *மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*

— திருவாக்கு:

ரோ 6:14 ... *''பாவம் உங்களை மேற்கொள்ளாது''*

அதாவது, பாவத்திற்கு ''மறுப்பு'' தெரிவிக்கும் சக்தி பெறுவீர்கள்

உள்ளே நடக்கும் அடுத்த போராட்டம் —

## (ஆ) மனதில் போராட்டம்

உண்மையான பக்தி மனதில்தான்!
(True religion is in the mind.)

எனவேதான்,

ரோ 12:2 ... *தேவ சித்தம் ... மனம் புதிதாகிறதினாலே ...*

இப்போராட்டம் **குறிப்பாக** மாம்சத்திற்கு அல்ல, மனதுக்கு எதிரானது —

2 கொரி 10:3,5 ... *தர்க்கங்கள் ... எண்ணங்கள் ...*

நல்லவற்றையே சிந்தித்து தீயவற்றிற்கு மறுப்பு தெரிவியுங்கள் —

பிலி 4:8 ... *ஒழுக்கம் ... கற்பு ... அன்பு*

தீய, வீணான சிந்தனைகளை அகற்றுங்கள்!

தலைக்குமேல் கழுகுகள் பறப்பதைத் தவிர்க்க முடியாது;
தலைமீது கூடு கட்டுவதைத் தடுக்கலாமே!

உலகச் சிந்தையுள்ளோரைப்போல் நாம் **சிந்திக்க** முடியாது —

எபே 4:17 ... *புறவினத்தார் ... வீணான சிந்தை ...*

- இச்சை நிறை மாம்சம், மாம்சீகச் சிந்தை.

இவையிரண்டுமே நாம் பிரதானமாய் மேற்கொள்ளவேண்டிய
உள்வீட்டு எதிரிகள் (எபே 2:3)

இதில் வெற்றியடைவதே,
வெளியிலிருக்கும் எதிரியை மேற்கொள்ள சிறந்த ஆயத்தம்!

- ஒரு சவால்:

''உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியை அணைக்கவே உங்களுக்கு
சக்தியில்லையேல், சாத்தானின் அரண்களை எப்படி
நிர்மூலமாக்கப்போகிறீர்கள்?'' — *லியோனார்டு ரேவன்ஹில்*

- சகோதரன் எமில் ஜெபசிங் (1941- ) இயற்றிய பாடல்:

*இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை*
*என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்;*
*நொறுக்கும், உருக்கும், உடையும், வனையும்,*
*உமக்கே உகந்த தூய சரீரமாய்;*
*ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்,*
*இயேசுவே, ஆவியால் நிரப்பும்;*
*வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ*
*அக்கினி என்னுள்ளம் இறக்கும்!*

## 5. சாத்தானைக் கட்ட முயலக்கூடாது.

Do not attempt to bind Satan.

- ஊழியரும் மக்களும் அடிக்கடி சொல்லுவது —
  ''சாத்தானே, நான் உன்னைக் கட்டுகிறேன்!''

சாத்தானைக் கட்ட முயலக்கூடாது என்பதற்கு இரு காரணங்கள் —

(அ) பைபிள் அதை அனுமதிப்பதில்லை.

பைபிள் நமக்குப் போதிப்பது —
பிசாசுக்கு *''எதிர்த்து''* நிற்கலாம்'' (யாக் 4:7)
அவனைத் *''துரத்தலாம்''* (மத் 10:1,8)
அவனுக்கு *''இடங்கொடுக்க''* மறுக்கவேண்டும் (எபே 4:27)
அவனுக்கு எதிராக *''விழித்திருக்க''* வேண்டும் (1 பேது 5:8)
ஆனால் கட்டவோ முயலக்கூடாது.

(அவனை நீங்கள் கட்டிவிட்டால், எப்படி ஓடுவான்?
நீங்கள்தான் அவனைத் தூக்கிச் சுமந்து வெளியே போடவேண்டும்!)

இரண்டாவது காரணம் —

(ஆ) சாத்தான் ஆயிரமாண்டு அரசாட்சியின்போது கட்டப்படும்வரை, இன்று விடுதலையாயிருக்கவேண்டுமென்பது இறைத்திட்டம்.
வெளி 20:1-3 ... *ஒரு தூதன் ... பெரிய சங்கிலி ... கட்டி வைத்து ... ஆயிரம் ஆண்டு*

அந்த ஆயிரமாண்டுக்குப் பின்பும் அவன் *''கொஞ்சக்காலம்''* விடுதலையாயிருப்பான் (வச 3)

இவ்வளவு **நேரிடையான,** தொடர்ந்த, வெளிப்படையான வேதப் போதனையில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும்.
**தெளிவான** இப்போதனையின் வெளிச்சத்தில்தான் பிற வசனங்களை வியாக்கியானிக்கவேண்டும்.
(உ-ம்) மத் 16:19 ... *பூவுலகில் நீ கட்டுவது எதுவோ ...*

இது சொல்லப்பட்ட சூழமைவைக் கவனியுங்கள்:

— பேதுருவுக்கு இயேசு கொடுத்தது சங்கிலியல்ல,
**''திறவுகோல்கள்''**

— அவை *''பரலோக ராஜ்யத்தின்'' திறவுகோல்கள்.*

இவை இரண்டு காரியங்களைக் குறிப்பிடுகின்றன —

(அ) யூதருக்கு இறையரசைத் திறந்துவிட்டது பேதுருதான் (அப் 2)
சமாரியருக்கு பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தபோது — (அப் 8)
புறவினத்தாருக்கு (கொர்நேலியு — அப் 10)

பரிசேயர் மற்றும் சதுசேயர் தேவ இராஜ்யத்தை அடைத்து
வைத்ததற்கு எதிரான செயலிது —
அவர்களும் நுழையார், பிறரையும் நுழைய விடார்! (மத் 23:13)

(ஆ) ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு திருச்சபையின்
அதிகாரத்தையும் இது குறிப்பிடுகிறது.

மத் 18:17-20 ... *சபை ... கட்டு ... கட்டவிழ் ...*

''கட்டுதலும், கட்டவிழ்த்தலும்'' ''குற்றப்படுத்து அல்லது
விடுதலையாக்கு'' என்பதற்கு அன்று பயன்படுத்தப்பட்ட
நீதிமன்றச் சொற்கள்.
மறுவார்த்தைகளில், திருச்சபை தீர்மானிக்கிறதைப்
பரலோகம் ஆமோதிக்கிறது.

☐ அப்படியானால், *''பலவானைக் கட்டுதல்''* என்பது என்ன?
மத் 12:28,29 ... *பலவானை முந்திக் கட்டினாலொழிய ...*
இது பரிசேயரது குற்றப்படுத்துதலுக்குப் பதில்.
பிசாசு *''பலவான்''* என்று இயேசு ஏற்றுக்கொள்கிறார் (வச 29);
அவரோ *''அதிக பலவானானவர்''* (லூக் 11:21,22)

மக்களைச் சிறைப்பிடிப்பிலிருந்து விடுவிக்க சுவிசேஷமானது
*''கடவுளின் சக்தியாய்''* இருக்கிறது (ரோ 1:16)

■ இதைப்போலவே,

☐ பிசாசை **நாடு கடத்திவிட** முயலாதீர்.
''நீ பாதாளத்திற்குப் போவாயா?'' என்று கேட்காதீர்.

சாத்தான் ஒரு பொய்யன்; அவனால் 1000 பொய் சொல்லமுடியும்!

இயேசு ஒருபோதும் அசுத்த ஆவிகளைப் பாதாளத்திற்கு அனுப்பியதில்லை;
ஒரே ஒரு முறை எங்கே என்று, அதுவும் ''பன்றிகளுக்குள்'' என்று, குறிப்பிட்டார் — (மாற் 5:10-13)

ஆயிரமாண்டு அரசாட்சி முடிந்த பின்புதான்,
சாத்தான் *பாதாளத்தில்* தள்ளப்படுவான் (வெளி 20:7,10)

☐ சாத்தானைச் **சுட்டெரிக்கவும்** முயலாதீர்
இது கிறிஸ்துவின் வருகையில் அவரால் செய்யப்படும்.
2 தெச 2:8 ... *''தமது வாயின் சுவாசத்தினாலே ...''*

சாத்தானாலும், அவனது தூதர்களாலும் தேவனுக்கு
யாதொரு பயனுமில்லையேல்,
அவர்களை எப்பொழுதோ வறுத்திருப்பார்!

☐ சாத்தானைத் **தூஷிக்கவோ சபிக்கவோ** கூடாது.
*தேவ தூதர்கூட ... தூஷிக்கமாட்டார் ...* 2 பேது 2:10ஆ, 11
*மிகாவேல்கூட சாத்தானைத் தூஷிக்கத் துணியான் ...* யூதா 8-10

எனவே,
சாத்தானைக் கட்டவோ (bind),
நாடு கடத்தவோ (banish),
சுட்டெரிக்கவோ (burn),
தூஷிக்கவோ (blaspheme) செய்யாதீர் / முயலாதீர்!

(பார்க்க: பக்கங்கள் 89-91, 714-716)

## 6. அப்போஸ்தலர் பாணியல்லாதவற்றைச் செய்யக்கூடாது.

Do not practise unapostolic acts.

- ஒரு காலத்தில் அசுத்த ஆவிகள் இருப்பதையே மக்கள் மறுத்துக்கொண்டிருந்தனர்;
  இப்பொழுதோ மறுமுனைக்கு ஊஞ்சலாடிவிட்டனர்:
  — பிசாசுகளைப் பற்றியவற்றில் அளவுக்கு மீறிய ஆர்வம்
  — இறையியலைவிடப் பிசாசியலில் அதிகத் தீவிரம்

- அப்போஸ்தலர் நடப்பிக்காத, ஆனால் இன்று செய்யப்படும், சில —

**(அ) ஜெப யுத்தம்** (Warfare Prayer)

அதாவது, தேவனல்ல, சாத்தானின் நினைவோடு ஜெபங்கள்

ஒரு தவறான மேற்கோள்:

தானியேல் — அவனது ஜெபத்திற்குப் பதில் 21 நாட்கள் தாமதம்
பெர்சியா இராஜ்யத்தின் அதிபதி தடை செய்தான் (தானி 10:13)

“பெர்சியா இராஜ்யத்தின் அதிபதியே, இறங்கி வா!”
என்று தானியேல் ஜெபிக்கவில்லை.

மாறாக, “தேவனை” நோக்கியே ஜெபித்துக்கொண்டிருந்தான் —
9:19 ... *ஆண்டவரே...ஆண்டவரே... ஆண்டவரே... தேவனே ...*
10:12 ... *உன்னுடைய தேவனுக்குமுன் ...*

இதைப்போல, ஏரோதையும், பிலாத்துவையும் கீழே தள்ளும்படி
ஆதிச்சபை ஜெபிக்கவில்லை.

மாறாக, தேவனது சர்வ வல்லமையை அறிக்கையிட்டு,
**அவரிடம்** முழு தைரியத்திற்காய் வேண்டினர் —
அப் 4:24,30 ... *தேவனை நோக்கி ... முழு தைரியத்தை ...*

அப்படியானால், *“மலையை நோக்கிப் பேசுவதென்றால் என்ன?”*
(மத் 17:20; 21:21)

''மலைகளைப் பெயர்ப்பது'' என்பது ஒரு காரியத்தின் கூடாத தன்மையை அழுத்திக் கூறும் யூத உவமானம், அவ்வளவுதான் — (உ-ம்) *மலைகள் விலகினாலும், என் கிருபை... சமாதானம்!* (ஏசா 54:10)

அப்போஸ்தலர் செய்யாத இன்னொரு காரியம் —

**(ஆ) ஜெப ஊர்வலம்** (Prayer Walks)

ஜெபத்தைக் குறித்து இயேசுவின் முதலாவது போதனையே
''மறைவாய் ஜெபி'' என்பதே (மத் 6:5,6)

மறைவில் வேண்டுங்கள்; வெளியில் பிரசங்கியுங்கள் (மத் 10:27)
E.M. பவுண்ட்ஸ்: ஜெபத்தின் இரகசியமே இரகசிய ஜெபம்தான்!
பேதுரு சிறையில் அடைக்கப்பட்டபோது, விசுவாசிகள் சிறையைச் சுற்றி ஜெபப் பவனி செல்லவில்லை (அப் 12:5,12,17).

டெல்லிக்காக ஜெபிக்க, டெல்லிக்குப் போகவேண்டியதில்லை;
இருக்குமிடத்திலிருந்தே ஜெபியுங்கள்;
ஏனெனில், தேவனுக்குத் தூரம் ஒரு பொருட்டல்ல (எரே 23:23).

எரிகோவைச் சுற்றியது ஜெபத்தைக் குறித்து எதையும் போதிக்க அல்ல.
அது இறைமக்களின் கீழ்ப்படிதலுக்கு ஒரு பரீட்சை, அவ்வளவுதான்.

அவர்கள் ஜெபிக்கவில்லை, துதிக்கவில்லை, சத்தமிட்டார்கள்;
அதுவும் இரட்சிக்க அல்ல, அழிக்க! (யோசு 6)

☐ பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலருக்கு நிலப்பகுதிகள் வாக்களிக்கப்பட்டன; இன்று கிறிஸ்தவர்களுக்குப் பூகோள ரீதியானதல்ல, ஆன்மீக அர்த்தமுள்ளது.

**(இ) எங்கே எந்த ஆவி எனக் கண்டறிதல்** (Spiritual Mapping)

எங்கே, எந்த ஆவி தீவிரம் என்று கண்டுபிடித்து,
அதற்கெதிராய் யுத்தம் செய்ய விசுவாசிகள் முயலுகின்றனர்.

இவ்விதப் போதனை பைபிளில் எங்குமே இல்லை.
மாறாக, பைபிள் போதிப்பது —

*''உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள்!''* (1 யோ 5:19)

அதாவது, பிசாசின் செயல்பாடு இல்லாத இடம்
மண்ணுலகிலேயே கிடையாது.

நாமோ எல்லா இடங்களிலும் ''பிரசங்கிக்க'' வேண்டும் —

(உ-ம்) அத்தேனே நகரில் பவுல் (அப் 17)

அத்தேனே நகரின் தேவர்கள், தேவதைகளோடு அவன் யுத்தம் செய்யவில்லை —

மாறாக, அந்நகர்வாசிகளுக்குப் ''பிரசங்கித்து''
அவர்களோடு ''விவாதித்தான்'' (வச 16,17)

ஒரு நீண்ட ''பிரசங்கம்'' செய்தான் (வச 22,23)

குருடாக்கப்பட்ட மக்களின் கண்களைச் *சுவிசேஷத்தின் வெளிச்சம்* திறக்கும்படி நாம் எளிமையாய்க் கிறிஸ்துவைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கவேண்டும், அவ்வளவுதான் (2 கொரி 4;3,4,5)

எபேசியர் 6இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மீகப் போராட்ட ஜெபம் *''நற்செய்தி அறிவிப்பதற்கான தைரியத்திற்காகவே''* (வச 19,20)

**(ஈ) தீர்க்கதரிசனச் செயல்பாடுகள்** (Prophetic Acts)

சிலைகள், பொம்மை மசூதிகளை உடைத்தல்,
படுதாக்களைக் கிழித்தல், இன்னும் பல.

இது கிறிஸ்தவரல்லாதவருக்கு எரிச்சலையே உண்டாக்கும்.
இது அஞ்ஞானம், போக்கிரித்தனம்.

இது போலவே, கொடிகள், உருவ பொம்மைகளை எரித்தல்.

விக்கிரகங்களை உடைக்க அல்ல, விக்கிரகாராதனையிலிருந்து மக்களைக் கைகளால் உண்டாக்கப்படமுடியாத ஜீவனுள்ள தேவனிடம் கொண்டுவரவே நம்மை அவர் அழைத்திருக்கிறார் (1 தெச 1:9)

சுவிசேஷத்திற்கு எப்பொழுதுமே எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும்;
நாமோ *''மக்களது நல்லெண்ணத்தை''* இழக்கக்கூடாது (அப் 2:47அ)
அதுவே திருச்சபை வளர்ச்சியின் இரகசியம் (வச 47ஆ)

## 7. வேதத்திற்குக் கூடுதலானவற்றில் ஆர்வம் கூடாது.

Do not be interested in extra-Biblical revelations.

■ பைபிள் ''முதன்மையானது'' (supreme) மட்டுமல்ல,
''போதுமானது'' (sufficient) என்றும் அடிக்கடி பார்த்துவருகிறோம்.

''விண்ணுலகில் வாழ்வதற்கு'' ஆயத்தமான ''மண்ணுலக வாழ்விற்குப்'' போதுமானது ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது
(யோ 20:30,31).

இந்த அறிவும், உணர்வுமே நம்மை ஆன்மீகப் போராட்டத்தில் பத்திரமாகவும் வெற்றியுடனும் காத்துக்கொள்ளும்.

■ திடீரென்று மக்கள் புது வெளிப்பாடுகளைக் கூறிக்கொண்டு, அவை ''இரகசியங்கள்'' என்றழைக்கின்றனர்.

திருமறையின்படி மாபெரும் இரகசியங்கள் இரண்டேதான் —

□ *தேவ பக்தியின் இரகசியம்*

1 தீமோ 3:16

அது கிறிஸ்துவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு பற்றியதே.
அதாவது, நான்கு சுவிசேஷங்களுடைய (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) சரித்திரப் பதிவுகள்,
மற்றும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேச வியாக்கியானங்களுக்குமேல் எதுவும் தேவையில்லை.

அடுத்தது —

□ *அக்கிரமத்தின் இரகசியம்*

2 தெச 2:7

இது அந்திக்கிறிஸ்துவையும் அவனது தூதர்களையும் பற்றியது.
போதுமானது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டாயிற்று —

சூழமைவு: வச 5-8

- ■ மற்றுமுள்ள இரகசியங்கள் —
  - ☐ *இறையரசின் இரகசியங்கள்*
    — உவமைகள் மூலம் கிறிஸ்து விளக்கிவிட்டார்
    (உ-ம்) மத் 13
  - ☐ *சுவிசேஷத்தின் இரகசியம்* (எபே 6:20)
  - ☐ *புறவினத்தாரும் இஸ்ரவேலரும் இரட்சிக்கப்படுவதைக் குறித்த இரகசியம்* (ரோ 11:25; கொலோ 1:26,27)
  - ☐ *கிறிஸ்துவுக்கும் சபைக்கும் ஐக்கியமெனும் இரகசியம்* (எபே 5:32)
  - ☐ *இரண்டாம் வருகை குறித்த இரகசியம்* (1 கொரி 15:51,52)
    *''இமைப்பொழுதில்'' நாம் மறுரூபமாக்கப்படுவோம்.*

- ■ இவ்விதம் விவிலியத்தில் தெளிவாக, வெளிப்படையாகப் போதிக்கப்படாதவற்றைத் தோண்டித் துருவாதீர் —
  உபா 29:29 ... *மறைவானவை ... கர்த்தருக்கே ...*

  முக்கியமாக,
  *''அக்கிரமத்தின் இரகசியத்தைத்''* தோண்டுவதில் எச்சரிக்கை!
  அது *''சாத்தானுடைய ஆழங்களில்''* முடிவடையும் —
  (வெளி 2:24)

  சாத்தானுடைய ஆழங்களை அறியாதிருப்பதே
  ஜெயங்கொள்வோருக்கான தகுதி! (வச 25-27)!

- ■ இன்று நூதனக் கொள்கைகளில் புத்தார்வம் காணப்படுகிறது —

  ''சாத்தான் சபை'' ''சாத்தான் ஆராதனை'' என்று மக்கள் ஈர்க்கப்படுகின்றனர்.
  முன்னறிவிப்பு — வெளி 2:9 ... *சாத்தானின் கூட்டம்*
  வெளி 3:9 ... *சாத்தானின் கூட்டம்*

  பொல்லாதவர்களாய்த் தோன்றமாட்டார்; ஆனால் வஞ்சகர்கள் —
  2 கொரி 11:14 ... *ஒளியின் தூதன்*
  :15 ... *நீதியின் ஊழியர்*

  (மூன்றாம் பாடத்தில் *ஒளியின் ஆயுதங்கள், நீதியின் ஆயுதங்கள்* குறித்துப் படித்தவற்றை நினைவுபடுத்துங்கள்.)

அதாவது, இருட்டுச் செயல்களை வெறுத்திடுங்கள்;

வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் நீதி நெறியில் நடவுங்கள்;

இது மட்டுமே பாதுகாப்பு.

■ ஆன்மீகப் போராட்டத்தில்,

தாக்குதலைவிடத் தற்காப்பே முக்கியம்.

(உ-ம்) எபே 6:13-17

இப்பட்டியலில் —

தற்காப்புக்கான படைக்கலன்கள் (ஐந்து) — Defence

*சத்தியமாகிய இடைக்கச்சை*
*நீதியாகிய மார்புக்கவசம்*
*ஆயத்தமெனும் மிதியடிகள்*
*விசுவாசமெனும் கேடயம்*
*இரட்சிப்பெனும் தலைச்சீரா*

தாக்குதலுக்கான படைக்கலன்: (ஒன்றே ஒன்று) — Offence

*தூயாவியானவரது வாள்*

## 8. பிசாசு துரத்துவதில் அதிகம் பரவசமடையக்கூடாது.

Do not get overexcited about demon-casting.

- லூக் 10:17-20 ... *ஆவிகள் கீழ்ப்படிகிறதற்காக அல்ல, உங்கள் பெயர்கள் பரலோகில் எழுதியிருக்கிறதற்காகவே மகிழுங்கள்.*

மறு வார்த்தைகளில், விளைவைவிடக் காரணத்திலேயே
அவர்கள் களிகூர இயேசு விரும்பினார் —

**பிசாசு ஏன் நமக்குக் கீழ்ப்படிந்தாகவேண்டும் —**

**(அ)** நாம் தேவனது பிள்ளைகள்

லூக் 10:20 ... *பெயர்கள் பரலோகில் எழுதப்பட்டிருக்கின்றன*
யோ 1:12 ... *தேவப் பிள்ளைகளாகும்படி ''அதிகாரம்.''*

''அதிகாரம்'' vs. ''வல்லமை'' (Authority vs. Power)
எல்லா விசுவாசிகளுக்கும் ''அதிகாரம்'' சரிசமமே;
''வல்லமை'' வரங்களோ நபருக்கு நபர் வேறுபடும்.

இந்த அதிகாரம் நமக்கு எப்படிக் கிடைக்கிறது? —

முதலாவது, அது கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டது —
லூக் 10:22 ... *சகலமும் எனக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது*
மத் 28:18 ... *சகல அதிகாரமும் எனக்கு ... அருளப்பட்டிருக்கிறது*

அடுத்து, அதைக் கிறிஸ்து தமது சீடருக்குக் கொடுக்கிறார் —
முதலாவது, 12 சீடர்க்கு — மத் 10:1
அடுத்து, 70 சீடர்க்கு — லூக் 10:1

பின்னர், விசுவாசிகளாகிய நம்மனைவருக்கும் தரப்படுகிறது —
மாற் 16:17 ... *விசுவாசிக்கிறவர்கள் ... என் நாமத்தினாலே ...*

பிசாசுகளைத் துரத்துதல் ஒரு வரம் **அல்ல** —
வரங்களின் பட்டியல் எதிலும் அது இல்லை!
அற்புதங்களும், சுகமளிப்புகளும் பட்டியல்களில் உண்டு;
பிசாசுகளைத் துரத்துதலோ கிடையாது! (1 கொரி 12:7-11)

இது **ஒவ்வொரு** விசுவாசிக்குமுள்ள ஊழிய உரிமை.

பிசாசு நமக்குக் கீழ்ப்படிந்தாகவேண்டியதற்கு அடுத்த காரணம் —

**(ஆ)** நம்மிடம் இறைவார்த்தை உண்டு.

மத் 8:16 ... *அந்த ஆவிகளை வார்த்தையினாலே துரத்தினார்*

ஆவியின் பட்டயம் ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியது
எபே 6:10 ... *என் சகோதரரே ...*
:17 ... *ஆவியின் பட்டயம் ...*
சங் 149:5,8,9 ... *பட்டயம் ... பரிசுத்தவான்கள் யாவருக்கும்*
(இப்பகுதி கிறிஸ்துவோடு நாம் நித்தியத்தில்
அரசாள்வதைக் குறித்தாலும் ...)

**(இ)** நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (தூதுவர்) 2 கொரி 5:20

நாம் இறையரசின் சார்பில் நிற்கிறோம்.
சாத்தானது இராஜ்யம் தேவனது இராஜ்யத்திற்குமுன்
தலைவணங்கத்தான் வேண்டும்.

எனவேதான், லூக் 11:20 ... *தேவனது விரல் ... தேவனது இராஜ்யம் ...*
*''அதிக'' பலவான்* (வச 21,22)

நம்முடையது ''வல்லரசுக்கும்'' (super power) மிஞ்சியது;
அது ''சர்வ வல்லரசு'' (supra power)!

— மத் 10:7 ... ***விண்ணரசு*** *... பிரசங்கியுங்கள்*
:8 ... *பிசாசுகளைத் துரத்துங்கள் ...*

இக்காரணங்களினாலேயே பிசாசு நமக்குக் கீழ்ப்படிந்தாகவேண்டும்.
பிசாசுகள் உங்களுக்குக் கீழ்ப்படிவதினால் பரவசப்படவேண்டாம்;
அவை கீழ்ப்படியாவிட்டால்தான் ஆச்சரியப்படவேண்டும்!

- இவ்விதம் ஆன்மீக அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, பிசாசு பிடித்தவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்!
  — முடியைப் பிடித்து இழுப்பது ...
  — படபடவென்று தலையில் அடிப்பது ...
  — கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றுவது ...

— நெற்றியில் கை வைத்து கீழே தள்ளுவது ...
— "புனித நீர்" என்று குடிக்க வைப்பது ...
— தகடு எடுப்பது ...

பாதிக்கப்பட்டவர்கள்மீது கோபப்படாதீர்கள்;
ஏற்கனவே அவர்கள் பிசாசின் கொடுமைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

(உ-ம்) மாற் 5:5 ... *கல்லுகளினால் கீறிக்கொண்டு ...*

- மேலும், பிசாசுகளுடன் அதிகம் பேசாதீர்கள் —

  லூக் 4:41 ... *இயேசு அவைகளைப் பேசாதபடி அதட்டினார்.*
  அப் 16:17,18 ... *அப்போஸ்தலர் "சினங்கொண்டு"* ...

(உ-ம்) சுகமளிக்கும் வரம் பெற்ற ஒரு பிரபல ஊழியர் மாலையில் கூட்டம் முடிந்ததும் நெடுநேரம் பிசாசுகளுடன் பேசி, முடிவில் வஞ்சிக்கப்பட்டுப்போனார்.

- பிசாசுகளுடன் உங்களது சக்தியை விரயமாக்காதீர்கள்.

உங்களை உறிஞ்சிவிட அவைகளுக்குத் தெரியும்!
பிசாசு துரத்துதலைவிட தூது அறிவித்தலே முக்கியம்.

*"பிரசங்கியுங்கள் ... அதற்குப்பின் ... துரத்துங்கள்"* (மத் 10:7,8)
இந்த முக்கியத்துவ வரிசையை மாற்றாதீர்!

## 9. தனித்தே போராடக்கூடாது.

Do not fight alone.

- பிர 4:9,12அ ... *ஒருவனை இன்னொருவன் மேற்கொள்ள வந்தால், இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் ...*

இச்சத்தியத்தை வலியுறுத்தும் திருவசனப் பகுதிகள் ஏராளம் —

☐ யேகோவாவின் பிரபல நாமம் —
*''சேனைகளின்'' கர்த்தர்* (படைகள்)
இங்கு பன்மையைக் கவனியுங்கள்.

☐ ஆதாமுக்கு ஏவாளைத் தேவன் எப்பொழுது, எதற்காகக் கொடுத்தார்?

(அ) ஆதி 2:16-18 ... அவனுக்குக் கட்டளை கொடுத்தவுடன்

(ஆ) சோதனைக்காரனுடன் போராடுவதற்குத் துணையாக (முக்கியமாக விபச்சாரத்தினின்று காக்க அல்ல — அங்குதான் வேறே பெண்ணே இல்லையே!)

☐ 5 எமோரிய அரசர்களுக்கு எதிராக யோசுவா — யோசு 10:5
*''யோசுவாவும் இஸ்ரவேலர் அனைவரும்''* (வச 7,29,31,34,36,38)

☐ கணக்கியலை மிஞ்சியது!
லேவி 26:8 ... *5 பேர் 100 பேரைத் துரத்துவர்;*
*100 பேர்* 2000 பேரையல்ல, *10,000 பேரை!*

☐ யோவாபும் அபிசாயும்
1 நாளா 19:10-13 ... *''என்னைவிட ... உன்னைவிட ... துணை நில்''*
நம்மெல்லாருக்குமே பலமும் உண்டு, பலக்குறைவும் உண்டு.

☐ 70 சீடர் இரண்டிரண்டு பேராய் அனுப்பப்பட்டனர் — லூக் 10:1
*''அவர்கள்'' திரும்பி வந்து ... பிசாசுகளும்* ***''எங்களுக்குக்''*** *கீழ்ப்படிகின்றன* (வச 17)

☐ தமது சீடர் பலங்குன்றியவராயிருந்தாலும்,

இயேசு அவர்களது துணையை நாடினார்!

*"... அந்தகார அதிகார வேளை"* (லூக் 22:53ஆ)

தமது *"சோதனைகளில்"* தம்மோடு அவர்களிருந்தனர்

எனப் பாராட்டினார் (வச 28)

☐ பாதாளத்தின் வாசல்கள் **"சபையை"** மேற்கொள்வதில்லை

(மத் 16:18)

☐ தேவனது வல்லமை அசாதாரணமாய் வெளிப்படாததற்குக் காரணம் நாம் தனித்தே செயல்பட விரும்புகிறோம் —

ஆனால்,

பேதுரு**வும்** யோவா**னும்**— ***"எங்களை*** *நோக்கிப்பார்!"* (அப் 3:4)

பவு**லும்** பர்னபா**வும்** — (அப் 14)

☐ நமது வாழ்வில் போராட்டங்கள் வலுக்கும்போது நமது சகோதர சகோதரிகளின் உதவி நாடவேண்டும்.

**அவ்விதமே,** யாராவது அலசடிபட்டுக்கொண்டிருந்தால் சும்மா பார்த்துக்கொண்டிராது அவர்களது பிரச்னையில் ஈடுபடவேண்டும்.

உங்கள் சொகுசு வட்டத்தைவிட்டு வெளி வாருங்கள் (எண் 32:6,7)

எனவேதான் திருமறை சொல்லுகிறது —

*"ஒருவரையொருவர் தேற்றுங்கள் ..."* (1 தெச 5:11)

*"ஒருவருக்காயொருவர் ஜெபம் பண்ணுங்கள் ..."* (யாக் 5:16)

*"தீமையினின்று* ***எங்களை*** *இரட்சித்துக்கொள்ளும்!"* (மத் 6:13)

*"ஓர் உறுப்பு பாடுபட்டால் எல்லா உறுப்புகளும் கூடப் பாடுபடும்."*

இதுவே "ஒரே உடல்" எனும் தத்துவம் (1 கொரி 12:26)

(உ-ம்) சுண்டு விரலில் புண் என்றாலும் முழுவுடலும் பாதிப்பு!

■ சாத்தானும் அவனது இராஜ்யமும் பிரிந்திருக்கவில்லை; பிரிவினையில்லாத சபையே அவனை முறியடிக்க முடியும்!

(மத் 12:25,26)

(பார்க்க: பக்கங்கள் 303-306, 380-384, 517-519, 546-549, 642-643)

## 10. உங்கள்மீதே சார்ந்திருக்கக்கூடாது.

Do not be self-confident.

- நாம் ''போர் வீரராய்த்'' தீவிரமாய்ப் போராட அழைக்கப்பட்டிருந்தாலும், முடிவில், ''யுத்தம் **நமதல்ல**, கர்த்தருடையது!''

  திரும்பத் திரும்ப இச்சத்தியம் பைபிளில் கூறப்பட்டுள்ளது: முனைப்பான இரு எடுத்துக்காட்டுகள் —

  - ☐ 2 நாளா 20:1 ... எதிரிகள்

    :12 ... யோசபாத்தின் ஜெபம்

    :15 ... யாகாசியேல் மூலம் தீர்க்கதரிசனம்
  - ☐ 1 சாமு 17 ... தாவீதும் கோலியாத்தும்

    :26ஆ ... *ஜீவனுள்ள தேவனது சேனைகளை ... விருத்தசேதனம் இல்லாதவன்*

    :35 ... *கரடியையும், சிங்கத்தையும் ... **நான்** கொன்றேன்*

    :37 ... *என்னைத் தப்புவித்த **கர்த்தர்** ....*

    :45 ... *நீ ஈட்டியோடு ... நானோ கர்த்தரின் நாமத்திலே*

    :47 ... *யுத்தம் கர்த்தருடையது!*
  - ☐ இன்னும் சில வசனங்கள்:

    யாத் 14:14; உபா 1:30; 3:22; யோசு 10:14,42; 23:3,10; 2 நாளா 20:29; 32:8; சங் 24:8; சக 14:3.

- நாம் ஏனோதானோவென்றிருக்கலாம் என்பது பொருளல்ல —

  நீதி 21:31 ... *குதிரை ... ஆயத்தம் ... ஜெயமோ ... கர்த்தரால்*

  நெகே 4:14 ... *''நீங்கள்'' ... யுத்தம்பண்ணுங்கள்*

  :17 ... *ஒரு கையில் சாந்துக்கரண்டி ... மறு கையில் ஆயுதம்*

  :20 ... *''நமது தேவன்'' ... யுத்தம்பண்ணுவார்!*

  மறு வார்த்தைகளில்,

  அதாவது, நம்மையன்றி தேவன் செய்ய ''மாட்டார்!''
  தேவனையன்றி நம்மால் செய்ய ''முடியாது!''
  Without us, God **WILL NOT**; without God, we **CANNOT**!

■ கடவுள்மீது சாருவதைவிட நம்மீது சார்வதே மனித இயல்பு —

எனவேதான்,

சங் 147:10,11 ... *குதிரையின் பலம் ... வீரனது கால்கள் ...*

சக 4:6,7 ... *பலம் ... பராக்கிரமம் ...*

*ஆவியானவர் ... சேனைகளின் கர்த்தர் ...*

*''கிருபை ... கிருபை!''*

தாவீதின் தவறு: மக்களைக் கணக்கிட்டான் (1 நாளா 21:1-3,7)

புயபலத்தைக் கணக்குப் பார்த்தான்.

■ ஆன்மீகப் போராட்ட வசனப்பகுதி நம்மை *''நில்லுங்கள்''* என்கிறது எபே 6:16

எகிப்தியர் இஸ்ரவேலரைத் துரத்தி வந்தபோது,

மோசே மக்களிடம் சொன்னது இதுவே —

யாத் 14:13 ... *''நின்று இரட்சிப்பைப் பாருங்கள்''*

பெறப்போகிற வெற்றிக்கான போராட்டமல்ல, ஏற்கனவே பெற்றுவிட்ட வெற்றியிலிருந்தே கிறிஸ்தவன் தொடர்கிறான்.

எனவேதான், *''துணிவு கொள்ளுங்கள், நான் உலகை வென்றேன்!''* (யோ 16:33)

*''உலகம்''* என்பது என்ன? (1 யோ 2:16)

*''உடல் ஆசை''*

*''இச்சை நிறை பார்வை''*

*''செல்வச் செருக்கு''*

இறைமக்களின் 3 பிரதான எதிரிகள்.

ஏவாள் சந்தித்த 3-பரிமாண சோதனை.

வனாந்தரத்தில் இயேசுவுக்கு வந்த 3 சோதனைகள்.

■ ''மந்திரவாதம்'' ''குறி சொல்லுதல்'' இவை பற்றி என்ன?

அப்போஸ்தலர் தங்கள் ஊழியங்களில் இச்சக்திகளை எதிர்கொண்டனர் — அப் 8:9-24; 13:6-11

நமக்கோ ஒரு திருவாக்குண்டு:

எண் 23:23 ... *யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை ...*
... *இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை*
... ***தேவன்*** *என்னென்ன செய்தார்*

*நாம் ''தேவனால்'' உண்டாயிருப்பதாலேயே வெற்றி* (1 யோ 4:4)

ஆம், உங்கள்மீதே சார்ந்திராதீர்கள்!

■ *''சேனைகளின் கர்த்தரைத்''* தொழுதுகொள்ளுங்கள்.

இறைமக்கள் அச்சுறுத்தப்பட்டபோதெல்லாம்,
தமது தீர்க்கர் மூலம், *''சேனைகளின் கர்த்தர்''*
எனும் தமது பெயரை இறைவன் நினைப்பூட்டினார் —

(உ-ம்) எரேமியா — 88 முறை
சகரியா — 55 முறை
மல்கியா — 25 முறை
ஆகாய் — 14 முறை

■ சகோதரன் ஜேசன் பாண்டியன் (1961- ), தஞ்சை, இயற்றிய பாடல்:

*சேனைகளின் கர்த்தர் தேவன், நம்முடன் இருக்கின்றார்;*
*சேனைகளின் கர்த்தர் இயேசு, நம்முன்னே செல்கின்றார்!*

*யுத்தத்திலே வல்லமையும் பராக்கிரமமுள்ள ராஜா,*
*யார் இந்த மகிமையின் ராஜா?*
*இரதங்களைச் சுட்டெரித்து ஈட்டிகளையும் முறித்து*
*வில்லையும் ஒடித்து ஜெயங்கொண்டார்;*
*இந்த தேவன் உயர்ந்த அடைக்கலம்,*
*இக்கட்டிலே உன்னத அனுகூலம்,*
*சேனைகளின் கர்த்தரவர்,*
*ஜெயங்களைத் தருபவர்!*